RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s188

OPEN ACCESS

# தொல்காப்பியர் சுட்டும் தொன்மை இசைமரபுகள்

**செ. கற்பகம்** [அ, *]

[அ] இசைத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா.

# Musical Notes in the Ancient Grammar Text Tholkappiyam

**S. Karpagam** [a, *]

[a] Department of Music, Tamil University, Thanjavur–613010, Tamil Nadu, India

* Corresponding Author: karpagamsureshkumar@gmail.com

Received: 15-08-2022
Revised: 20-10-2022
Accepted: 03-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Tholkappiyam is the first text in Tamil that proves Tamil is a classical language. This text is written by absorbing the ancient writing style and the words used by the ancient Tamils. This text is still living and it is the book of antiquity and perfection. This text is the pioneer for both grammar and music. Today's use of grammar in music can be traced back to the root of Tholkappiyam. This article discusses about the phonetic theory, phonetic system, syllables, function of syllables, vowels, Tamil alphabets, calculations, short and long sounds, systems of Kalipaa and Paripaadal, internal hymns, verbal salutations, objective salutations and so on. This article clearly explains the contents, methods and news about musical instruments and musicians.

**Keywords:** Tholkappiyam, Ancient Grammar Text, Musical Notes, Classical Language

## முன்னுரை

தொல்காப்பியம் இசை இலக்கண முன்னோடி நூல். இயல், இசை, நாடகம் என்கிற முத்தமிழுக்கும் உரியது. இது ஓர் இலக்கண நூலாகும். இன்றுவரை கிடைத்துள்ள நூல்களுள் முதல் நூலாகும். அதுவும் இலக்கண நூலாகும். எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும், 1610 நூற்பாக்களையும் கொண்டுள்ள முழுமையாகக் கிடைத்துள்ள நூல். இதுவரை வாழ்ந்து வரும் தகுதியுள்ள தொன்மையான உலக நூல். காலந்தோறும் உரையாசிரியர் பலரால் உரை விளக்கங்கள் தரப்பட்ட நூல். பிற்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களின் முன்னோடி நூல். தொல்காப்பியத்திற்கு முன்பே இலக்கியங்கள் பல இருந்துள்ளன. அவற்றைத் தொகுத்தும் பகுத்தும் வகுத்தும் காட்டிய நூல். பிற்காலத்தில் தோன்றிய இலக்கிய வளர்ச்சிக்கு வழிக்காட்டிய நூல். இந்நூல் இயல், இலக்கண நூல் மட்டுமல்ல இசை இலக்கணத்திற்கும் இதுவே முன்னோடி நூலாகும். இத்தகைய இலக்கண நூலான தொல்காப்பியத்தில் காணப்படும் இசைக்கோட்பாடுகளை இக்கட்டுரையின் வாயிலாகக் காணலாம்.

## பேச்சுறுப்புகள்

பேச்சுறுப்புகள் எட்டு என்று தொல்காப்பியர் குறிப்பிடுவார். இப்பேச்சுறுப்புகளான தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் இவற்றின் அடிப்படையில் ஒலி தோன்றும் முறையை “உந்தி முதலா முந்துவளி” என்ற நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

“உந்தி முதலா முந்துவளி தோன்றி

தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ

பல்லும் இதழும் நாவும் மூக்கும்

அண்ணமும் உளப்பட எண் முறை நிலையான்

உறுப்பு உற்று அமைய நெறிப்பட நாடி

எல்லா எழுத்தும் சொல்லும் காலை

பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல

திறப்படத் தெரியும் காட்சியான"

இவ்வுறுப்புகளின் தொழிற்பாட்டால் ஒலிகள் தோன்றும் என்பதனை இசை நூலாரும் குறிப்பிடுகின்றனர் (Tamizhannal, 2006). இவற்றைப் பெருந்தானம் என்றும், எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், ஒலி, உருட்டு, தாக்கு, வழுக்கல் என்ற எட்டு தொழிற் முறைகளால் இசை ஒலிகளும் பண்களும் பிறக்குமென இசை நூல் குறிப்பிடுகிறது.

தொல்காப்பியர் உயிர் ஒலிகளைக் குறில் என்றும் நெடில் என்று பகுப்பார் (Subramanian, 2010). இவற்றில் குறில் ஐந்து, நெடில் ஏழு. இவ்வேழு நெட்டெழுத்துக்கள் பண்டைய நாளில் இசை ஒலிகள் ஒலிப்பதற்குரிய முறையாகவும் இசைநூலார் கண்டனர். இன்றும் நாம் கூறும் ஏழு சுவரங்களுள் குரல், இளி நீங்கலாக ஏனைய ஐந்தும் குறில் நெடில் என்ற இரு விகற்ப நிலைகள் தோன்றுவதற்குத் தொல்காப்பியர் வகுத்துரைத்த உயிர் எழுத்துக்கோட்பாடுகள் அடிப்படையாக அமைந்துள்ளன. ஏழு உயிர் ஒலிகளில் ஐகாரம், ஔகாரம் என்ற இரண்டும் நெடிலாக மட்டும் ஒலிக்கும். ஏனைய ஐந்து உயிர் ஒலிகள் ஒரு மாத்திரை அளவில் ஒலிப்பது குறில் என்றும், இரண்டு மாத்திரைகள் அளவில் ஒலிப்பது நெடில் என்றும் கூறப்படும். இவ் அமைப்பு முறையே இசை நூல் வழக்கினும் தொடர்ந்துள்ளது. உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு என்று தொல்காப்பியர் குறிப்பிடுவார். சுவர தானங்கள் பன்னிரண்டு என்றும் இசைநூலார் குறிப்பிடுவதனையும் ஈண்டு நாம் ஒப்பு நோக்கி உணர்வோம்.

## மாத்திரை அளவு

இயலிலும் இசையிலும் ஒலிகளின் காலக் கணக்கீடு முக்கிய பங்கு பெறும். இதனை மாத்திரை என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இம்மாத்திரை கணக்கிட கண் இமைத்தலையும் கைநொடித்தலையும் இயற்கை செயற்கை அளவுகோல்களாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

"கண்ணிமை நொடியென அவ்வேமாத்திரை

நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே"

மேலும், அரையளவு குறுகலும், கால் மாத்திரையாகக் குறுகலும், இரண்டு மாத்திரைக்கு மேல் மிகுதலும் உள்ளன என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார் (Sanmuga Selvaganapathy, 1996). குறுகுதல் என்றும் அளபெடை என்றும் பெயரிடுகிறார். இசைத்தாளக் கணக்கீட்டில் இவ்அளவு முறைகள் இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றன. மேலும்,

"அளபிறந்து உயர்த்தலும் ஒற்றிசை நீடலும்

உளபென மொழிப இசையொடு சிவணிய

நரம்பின் மறைய என்மனார் புலவர்"

என்று அளபெடுத்து ஒலிக்கும் முறை இசை நூல்களுள் உண்டு என்றும், அதனை "நரம்பின் மறை' என்றும் குறிப்பிடுகிறார். இசையில் இம்முறை இன்றும் வழக்கில் உள்ளதனை நாம் அறிவோம் (Tamizhannal, 1981).

## அசை, சீர், தூக்கு

எழுத்தொலிகள் கூடுவதனை அசை என்றும், அசைகள் சேர்வதனைச் சீர் என்றும், அசையும் சீரும் இசையுடன் பொருந்தும் நிலையைத் தூக்கு என்றும் கூறுவர். தூக்கு என்பது இசையில் அமையும் இலயப்பிடிப்பான காலப் பகுப்பாகும். இசைநூலார் கூறும் அலகு முறையின் முன்னோடியாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் தூக்கு அமைந்துள்ளது.

இத்தூக்கு ஏழு வகைப்படும். இவை அடிப்படை தாள அளவு கொண்டன. செந்தூக்கு, குழந்தைப் போன்று சிறிய அளவு கொண்டது மதலை. முச்சீர் கொண்டது துணிபு. நான்கு சீர் கொண்டது கோயில். நான்கினும் மிக்கது நிவப்புத்தூக்கு. காலில் அணியும் சிலம்பு போல் அறுசீர் கொண்டது கழால் தூக்கு. எல்லா தூக்குகளிலும் நீண்டது நெடுந்தூக்கு இவற்றை இசையில் அமையும் தாள அளவு முறையொடு இசையறிஞர் வீ.ப.கா.சுந்தரம் அவர்கள் பட்டியலிட்டுள்ளார் (Sundaram, 1998).

**அட்டவணை 1.** சீர்களும் அதற்குரிய தமிழ்ப்பெயர்களும்

| வ. எண் | தூக்கின் பெயர் | அலகுமுறை | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|
| 1. | 1. சீரடி1.சீர் செந்தூக்கு | 1. எண்-அநுதுரிதம் | அரைத்துரிதம் |
| 2. | 2. சீரடி 2. சீர் மதலைத்தூக்கு | 2. எண்-துரிதம் | துரிதம் |
| 3. | 3. சீரடி 3. சீர் துணிபு தூக்கு | 3. எண்-திசுரலகு | மும்மை அலகு |
| 4. | 4. சீரடி 4. சீர் கோயில் தூக்கு | 4. எண்-சதுஸ்ரஅலகு | நான்மை அலகு |
| 5. | 5. சீரடி 5. சீர் நிவப்பு தூக்கு | 5. எண்.கண்டலகு | ஐம்மை அலகு |
| 6. | 6. சீரடி 6. சீர் கழால் தூக்கு | 6. எண்-திஸ்ரலகு(ரூபகம்) | அறுமை அலகு |
| 7. | 7. சீரடி 7. சீர் நெடில்தூக்கு | 7. எண்.மிஸ்ரலகு | எழுமை அலகு |

## பா வகைகள்

தொல்காப்பியர் குறிப்பிடும் ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்கு வகைகளும் கைக்கிளை, அங்கதம், செவியுறை, வாயுறை, புறநிலை என்ற பாக்களும் துறைதாழிசை விருத்தம் என்ற பாவினங்களும், கலிப்பாட்டில் வரும் தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்ற உறுப்புகளும், கலியும் பரிபாடலும், இசைப் பாட்டாகி செந்துறை மார்க்கம் என்று தொல்காப்பியர் உரையாசிரியர் பேராசிரியர், தொல் செய்யுளியல் 242இல் குறப்பிடுகிறார். பரிபாடல், பரிந்தப் பாட்டாக இசையுடன் அமைந்த பாட்டாகும். இது இசைப்பாட்டு என்றும், இப்பரிபாடல்களுக்குப் பண் பெயரும், இசையமைத்தோர் பெயரும் காணப்படுகின்றன. பாடல்கள் துறை, தாழிசை, விருத்தமென விரிந்து பல்வகை இசைப்பாக்களாகச் சிலம்பிலும், பன்னிரு திருமுறைகளிலும், நாலாயிர திவ்விய பிரபந்தம் போன்ற தேவபாணியாகிய தெய்வத்தமிழ்க் கூறும் நூல்களில் இன்று நாம் காண்கிறோம்

## பண்ணத்தி

பண்ணத்தி என்ற உறுப்புப் பற்றியும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

"பாட்டிடை கலந்த பொருளவாகி

பாட்டியன இயல பண்ணத்தி இயல்பே"

என்று குறிப்பிடுகிறார் (Gowmareeswari, 2008). பண்+அத்து+இ= பண்ணத்தி. பண்ணிற்குரிய ஓசைகளுடன் கூடிய பா என்பது பொருளாகும். பண்ணீர்மைகளைக் காட்ட உதவும் இசை உருப்படி பண்ணத்தியாகும் (Perumal, 1978).

 DOI: 10.34256/irjt224s188

தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் பண்ணைத் தோற்றுவிக்கும் செய்யுள் என்றும், இசைத்தமிழில் ஓதப்படுவது என்றும் குறிப்பிடுகிறார். இதனை இன்றைய இசை இலக்கணத்தில் இராக இலக்கண கீதம் என்கிறார் (Sundaram, 1998). (தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர் உரையில் பண்ணத்தி என்பது நாட்டுப்புறப் பாடல்களைக் குறிக்கும் என்றும் குறிப்பிடுவதொடு வஞ்சிப்பாட்டு, மோதிரப்பாட்டு, கடகண்டு பாடல்களையும் குறிப்பிடுகிறார்

## நால்வகைப்பண்கள்

தொல்காப்பியர் நானிலங்களுக்குரிய கருப்பொருள்களைப் பட்டியலிடும் பொழுது பறை, யாழ் என்ற இரண்டையும் குறிப்பிடுகிறார்.

“தெய்வம் உணாவே மாமரம் புள்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப”

இந்நூற்பாவிற்கு உரை வழங்கிய இளம்பூரணர் யாழ் என்பது பெரும் பண்ணைக் குறிப்பது என்றும், யாழின் பகுதி என்பது அதன் வழிப்பிறக்கும் கிளைப் பண்ணைக்குறிக்கும் என்று கூறுகிறார் (Balasundaram, 2000). நானிலங்களுக்குரிய முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலங்களுக்குரிய பண்களும், கொட்டு முழக்குகளும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

“குரல் குரலாக நிற்பது - முல்லையாழ் என்றும்,

துத்தம் குரலாக நிற்பது - குறிஞ்சி யாழ் என்றும்,

இளி குரலாக நிற்பது - மருத யாழ் என்றும்,

விளரி குரலாக நிற்பது - நெய்தல் யாழ் என்றும்”

கூறுவர். இப்பண் வரிசைமுறை இசையுலகின் முன்னோடி முறையாக அமைந்துள்ளது (Arunachalam, Balasubramaniam, 2003).

## நிலமும் பொழுதுகளும்

நிலத்திற்குரிய சிறுபொழுதுகளைக் குறிப்பிடும் பொழுது முல்லைப்பண் மாலைப் பொழுதிலும் மருதப்பண் வைகறை விடியலிலும், நெய்தல் பண் எல்படுபொழுதிலும் வரும் என்று உரைப்பர். பெரும்பொழுது சிறுபொழுது அடிப்படையில் இன்னப் பண்கள் இன்னப் பொழுதில் இசைக்கவேண்டும் என்ற முறையிலும் அமைந்துள்ளன.

## கலிப்பா உறுப்புகள்

கலிப்பாவும், கலிப்பா இனங்களும் கலித்துறை, கலித் தாழிசை, கலி விருத்தமும் துள்ளல் நடைத்தாய் பண்ணொடும் தாளத்தொடும் அமைந்த பாடல்களாக அமைந்துள்ளமையை நாம் அறிகிறோம். இவற்றின் முன்னோடியாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் பா இலக்கணங்கள் அமைந்துள்ளன. தரவு, தாழிசை, தனிச்சொல், அராகம், அம்போதரங்கம், சுரிதக உறுப்பமைதிகள் பிற்காலத்தில் இசை உருப்படிகளின் முன்னோடிகளாக அமைந்துள்ளன. இவைபோல் பரிபாடலில் அமையும் கொச்சகம், அராகம், எருத்து, சுரிதகம் சொற் சீரடி போன்றன பிற்கால இசை உருப்படிகளின் முன்னோடிகளாக அமைந்துள்ளன. இன்று காணப்படும் இசை உருப்படிகள் கீர்த்தனம், பதம், பதவர்ணம், வாழ்த்துப்பாடல்கள், அம்மானை, ஊசல், கந்துகம், வள்ளைப்பாட்டு, கொச்சகம், முரி, விரிமுரண், மாலைமாற்று, யமகம், வரிப்பாடல்கள், தரு, திபதை, கண்ணி, விருத்தம், சாழல் போன்ற பல்வகை இசை உருக்களின் வேர் நிலைகளைத் தொல்காப்பியத்தின் மூலம் நாம் காணலாம். மேலும், எழுத்து

அடிப்படையிலும் சொல் அடிப்படையிலும், தொடை அடிப்படையிலும், ஓசை அடிப்படையிலும், நடை அடிப்படையிலும்,பொருள் அடிப்படையிலும், சுவைஅடிப்படையிலும் தொல்காப்பியர் கூறிய இருபது வண்ணங்கள், வண்ண இசைப்பாக்களின் முன்னோடியாகும் (Sanmuga Selvaganapathy, Karpagam, 2019).

பாட்டினில் அமையும் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எண் வகை சுவைக் கோட்பாடுகளும், பாணர், பாடினி, கூத்தர், பொருநர், விறலி போன்ற இசைக் கலைஞர்கள் பற்றியும் நமக்கு முதன்முதலாக உரைக்கும் நூலாகத் தொல்காப்பியமே அமைந்துள்ளது.

## முடிவுரை

தொல்காப்பியர் குறிப்பிடும் செய்யுளியல் இயற்றமிழுக்கு மட்டுமன்று இசைத்தமிழுக்கு உரிய இசைச்சிறப்பு கூறும் இலக்கணப் பகுதியாகும். இசையியல் ஆய்வாளர்கள் தொல்காப்பியம் இசை இலக்கண முன்னோடி நூல் என்ற நிலையில் மேன்மேலும் ஆராயவேண்டும். ஆராய்வதற்குரிய ஏராளமான களங்கள் உள்ளன. அவ்வப்பொழுது உரையாசிரியர்கள் காட்டிய உரைக்குறிப்புகள் மூலம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். இசைத்தமிழ் உலகில் கிடைத்த முதல் இசை இலக்கண நூல் தொல்காப்பியம் என்று உணர்வோம்.

## References


Arunachalam, Balasubramaniam, (2003) Tamilisai ilakkiya varalaru, Kadavu Pathippagam, Chennai, India.

Balasundaram, S. (1989) Tholkappiyam Arachchi Kandikaiurai, Thamarai Veeliyeedu, Chennai, India.

Gowmareeswari, S. (2008) Tholkappiyam Porulathigaram, Saradha Pathippagam, Chennai, India.

Perumal, A.N. (1978) Tamilar Isai, International Institute of Tamil Studies, Chennai, India.

Sanmuga Selvaganapathy, (1996) Tholkappiyam Ezhuthuathigaram, Bharathidasan University, Trichy, India.

Sanmuga Selvaganapathy, Karpagam, (2019) Isai tami Arinarkal Thoguthi-3, Bharathidasan University, Trichy, India.

Subramanian, S.V. Tholkappiyam thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

Sundaram, V.P.K. (1998) Tamilisai Kalanjiyam Thoguthi-3, Bharathidasan University, Trichy, India.

Sundaram, V.P.K. (2000) Tholkappiyathil isai kuripukal, International Institute of Tamil Studies, Chennai, India.

Tamizhannal, (2006) Tholkappiyam Ezhuthuathigaram, Manivasagar Pathippagam, Chennai, India.

Tamizhannal, (1981) Tholkappiyam, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License